இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 330 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 26 – புதன்கிழமை 10 ஜுலை 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 330 : Thiruvalluvar Year - 2055 - Aani 26 - Wednesday 10 July 2024 - Dak 8 Pages ₹ 5.00

## இடைத்தேர்தல்:

# விக்கிரவாண்டி தொகுதியில் இன்று வாக்குப்பதிவு!

## காலை 7 மணிக்குத் தொடங்குகிறது!

**விக்கிரவாண்டி, ஜுலை 10 -**

**விக்கிரவாண்டி தொகுதி இடைத் தேர்தலில் வாக்குப்பதிவு இன்று (10.07.2024) காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. இதற்காக 276 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.**

விழுப்புரம் மாவட்டம் - விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதியின் கழக சட்டமன்ற உறுப்பினராக இருந்த புகழேந்தி அவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி உடல் நலக்குறைவால் மறைவுற்றதைத் தொடர்ந்து, இத்தொகுதி காலியாக இருப்பதாக சட்டப்பேரவைச் செயலகம் தேர்தல் ஆணையத்துக்கு தகவல் அனுப்பியது. இதைத் தொடர்ந்து விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் ஜுலை 10ஆம் தேதி நடைபெறும் என தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டது.

இதையடுத்து கடந்த மாதம் (ஜுன்) 14ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் தொடங்கியது. 24ஆம் தேதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெற்றது. தாக்கல் செய்யப்பட்ட 64 வேட்புமனுக்களில் 35 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இறுதி வேட்பாளர் பட்டியல் கடந்த ஜுன் 26ஆம் தேதி வெளியிடப்பட்டது. 29 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

**அன்னியூர் சிவா வேட்பாளர் - கழகத் தலைவர் அறிவிப்பு!**

விக்கிரவாண்டி தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்ததும் விக்கிரவாண்டித் தொகுதியில் கழக விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, 'இந்தியா' கூட்டணி சார்பில் கழக வேட்பாளராக போட்டியிடுவார் என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஜுன் 11ஆம் தேதி அன்று அறிவித்தார்.

**தொகுதிக்கான தேர்தல் பணிக்குழு!**

அதனைத் தொடர்ந்து விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் பணிக்குழுவை தலைமைக் கழகம் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து தேர்தல் பணிக்குழுவினர் விக்கிரவாண்டி தொகுதியில் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். மாவட்டக் கழகத்தினர் தங்களது மாவட்டக் கழகத்தினருடன் தீவிர களப் பணியில் ஈடுபட்டனர்.

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!**

இந்நிலையில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 7ஆம் தேதி அன்று விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்களுக்கு காணொலி காட்சி உரை மூலமாக 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து வாக்களிக்குமாறு தொகுதி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பல்லாயிரக்கணக்கான மக்களிடையே பிரச்சாரம்!**

இதனைத் தொடர்ந்து கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விக்கிரவாண்டித் தொகுதி முழுவதும் 7 மற்றும் 8.7.2024 (ஞாயிறு, திங்கள்) ஆகிய இருதினங்கள் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிரச்சாரம் செய்த இடங்களிலெல்லாம் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து எங்கள் வாக்கு உதய சூரியனுக்கே என்று உறுதி அளித்தனர். அப்போது உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களை மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

விக்கிரவாண்டித் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது.

தேர்தல் பணியில் ஈடுபடும் போலீசார் ஏற்கனவே தேர்தல் அலுவலகத்தில் தபால் வாக்கு செலுத்தினர். இதேபோல், 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்கு செலுத்த விருப்பப்பட்டவர்களிடம் தபால் வாக்குகள் வீடு, வீடாகச் சென்று சேகரிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன. பதற்றமான, மிக பதற்றமான 44 வாக்குச்சாவடிகளில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவம் பாதுகாப்புக்கும், வெப் கேமரா பொருத்தப்பட்டு நுண்பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து 13ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

**276 வாக்குச்சாவடிகள்!**

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்கு 276 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் தலா ஒரு முதன்மை அலுவலர் மற்றும் 3 நிலைகளிலான வாக்குச்சாவடி அலுவலர்கள் என மொத்தம் 4 பேர் பணியாற்றுவர். அதன்படி, 276 வாக்குச்சாவடிகளில் 1,355 பேர் பணியில் ஈடுபடுகின்றனர். வாக்குப்பதிவு இயந்திரங்கள் (ஈ.வி.எம்.), விவிபேட், கட்டுப்பாட்டு இயந்திரங்கள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. வாக்குப்பதிவு இயந்திரங்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட ஜி.பி.ஆர்.எஸ். கருவி பொருத்தப்பட்ட வாகனங்களில், மண்டல அலுவலர்களின் முன்னிலையில் போலீஸ் பாதுகாப்புடன் நேற்று அந்தந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

இத்தொகுதியில் 1,16,962 ஆண் வாக்காளர்கள், 1,20,040 பெண் வாக்காளர்கள், திருநங்கைகள் 29 பேர் என மொத்தம் 2,37,031 பேர் வாக்களிக்க உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அண்மையில் உயிரிழந்த பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் இல்லத்திற்கு நேற்று (9.7.2024) நேரில் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.

## ஆம்ஸ்ட்ராங் படுகொலை!

# குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்படுவர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

*சென்னை, ஜுலை 10 -*

*"பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலையில் கொடுங்குற்றச் செயலில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் அவரது இல்லத்திற்குச் சென்று அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறிய போது உறுதியளித்தார்.*

*சென்னையில் கடந்த 5.7.2024 (வெள்ளிக்கிழமை) அன்று பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் அவர்கள் அடையாளம் தெரியாத சில நபர்களால் படுகொலை செய்யப்பட்டார்.*

**ஆம்ஸ்ட்ராங் குடும்பத்தினருக்கு நேரில் ஆறுதல்!**

*அவரது இறுதி மரியாதைக்குத் தேவையான பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் அரசின் சார்பில் செய்து தரப்பட்டன.*

*இந்நிலையில், நேற்று (9.7.2024) முதலமைச்சர் அவர்கள், சென்னை, அயனாவரம் பகுதியில் அமைந்துள்ள ஆம்ஸ்ட்ராங் அவர்களின் இல்லத்திற்குச் சென்று, ஆம்ஸ்ட்ராங் அவர்களின் மனைவி திருமதி பொற்கொடி மற்றும் குடும்பத்தினரைச் சந்தித்து, தனது ஆழ்ந்த அனுதாபத்தினையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டார்.*

*மேலும், இவ்வழக்கில் தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொண்டு, இந்தக் கொடுங் குற்றச் செயலில் ஈடுபட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்.*

*இச்சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்களுடன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களும் உடனிருந்தார்.*

## ஒகேனக்கலுக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

தருமபுரி, ஜுலை 10 –

கர்நாடக – தமிழக எல்லையான பிலிகுண்டு பகுதிக்கு நேற்று நீர்வரத்து 5000 ஆயிரம் கன அடியில் இருந்து 5,500 கன அடியாக அதிகரித்துள்ளது. இங்கு நீர்வரத்தை மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். இதனை தொடர்ந்து ஒகேனக்கல்லில் நீர்வரத்து வினாடிக்கு 5,500 கன அடியாகடிக்கிறது. இங்குள்ள மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

இந்த தண்ணீர் நேராக மேட்டூர் அணைக்கு அணைக்கு வருகிறது. இந்த நிலையில் நேற்று நீர்வரத்து அதிகரித்து விநாடிக்கு 3,341 கன அடி வீதம் தண்ணீர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து வினாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் காவிரி ஆற்றில் திறக்கப்பட்டு வருகிறது.

## மாநிலங்களவையில்

# பிரதமர் மோடிக்கு எதிராக காங்கிரஸ் உரிமை மீறல் நோட்டீஸ்!

## நாடாளுமன்ற மரபுகளை தகர்த்துவிட்டதாக காங்கிரஸ் கண்டனம்!

*புதுடெல்லி, ஜுலை 10-*

*பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக மாநிலங்களவையில் காங்கிரஸ் கட்சி சார்பில் உரிமை மீறல் நோட்டீஸ் கொடுத்துள்ளது. நாடாளுமன்ற மரபுகளை மோடி தகர்த்துவிட்டதாகவும் அதில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதுதொடர்பாக பிரதமர் மோடிக்கு எதிராக மாநிலங்களவை தலைவர் ஜெகதீப் தன்கருக்கு, காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் நோட்டீஸ் ஒன்றை அனுப்பியுள்ளார்.*

*அதில், கடந்த 2ஆம் தேதி மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்த பிரதமர் மோடி, முன்னாள் குடியரசு துணைத்தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான ஹமீது அன்சாரி ஒருசார்பாக நடந்துகொண்டார் என பிரதமர் மோடி விமர்சித்ததாக குற்றஞ்சாட்டியுள்ளார்.*

*முன்னாள் குடியரசு துணை தலைவரும், மாநிலங்களவைத் தலைவராக இருந்தவருமான ஹமீது அன்சாரியை, பிரதமர் மோடி விமர்சித்தது உரிமை மீறல் என்றும் அந்த நோட்டீசில் ஜெய்ராம் ரமேஷ் சுட்டிக்காட்டியுள்ளார். ஹமீது அன்சாரியை விமர்சித்ததன் மூலம் நாடாளுமன்ற மரபுகளை பிரதமர் மோடி தகர்த்துவிட்டதாகவும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*எனவே, இந்த விவகாரத்தில் பிரதமருக்கு எதிராக உரிமை மீறல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜெய்ராம் ரமேஷ் வலியுறுத்தியுள்ளார்.*


## திராவிட வரலாற்றில்

# துருவ நட்சத்திரமாக விளங்கியவர் பனகல் அரசர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஜுலை 10-**

**திராவிட வரலாற்றில் துருவ நட்சத்திரமாக விளங்கியவர் பனகல் அரசர் என்று அவரது பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.**



முன்னாள் சென்னை மாகாண முதலமைச்சர் பனகல் அரசர் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**இந்து சமய அறநிலையத் துறை, இடஒதுக்கீடு போன்றவற்றுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்த சட்டங்களைக் கொண்டு வந்து திராவிட வரலாற்றில் துருவ நட்சத்திரமாக விளங்கும் பனகல் அரசரின் பிறந்த நாள் இன்று!**

**அவரது சாதனைகளைப் பயின்று உரமூட்டிக் கொள்வோம்!**

**திராவிடச் சமத்துவம் நிலை பெறத் தொடர்ந்து வெல்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.